புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat, Near KFC Moolakulam, Puducherry-605009,
Cell: 97505 89992,9629620802

PRGI.NO.TNTAM/25/A1635 T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்
NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 244 | 10-03-2026 | செவ்வாய் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி- புதுச்சேரி
Volum 01 | Issue: 244 | 10-03-2026 | Tuesday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy-Puducherry


# நாளை பிரதமர் மோடி வருகை: திருச்சியில் டிரோன்கள் பறக்க தடை விதிப்பு



திருச்சி: மார்ச். 10–

சட்டமன்ற தேர்தலை எதிர்கொள்ளும் வகையில் தமிழகத்தில் அரசியல் கட்சிகள் தீவிரம் காட்டி வருகின்றன.தி.மு.க. தலைமையிலான கூட்டணி ஏறத்தாழ இறுதி செய்யப்பட்ட நிலையில், அ.தி.மு.க பா.ஜ.க. உருவாக்கியுள்ள தேசிய ஜனநாயக கூட்டணியில் அ.ம.மு.க., த.மா.கா., ஐ.ஜே.கே. உள்ளிட்ட கட்சிகள் இணைந்துள்ளன. தற்போதைய சூழலில் வலுவான கூட்டணி அமைத்துள்ளதாக அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கூறி வருகிறார்.இதற்கிடையே தேர்தல் தேதி அறிவிப்பு வெளியாகும் முன்னரே தமிழகத்தில் அனல் பறக்கும் பிரசார கூட்டங்கள் பெரிய நகரங்களில் நடத்தப்பட்டு வருகிறது. அதன் ஒரு பகுதியாக கடந்த மாதம் திருவள்ளூரில் நடைபெற்ற தேசிய ஜனநாயக கூட்டணி பொதுக்கூட்டத்தில் பிரதமர் மோடி மற்றும் அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி, அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன், பா.ம.க. தலைவர் அன்புமணி உள்ளிட்டோர் ஒரே மேடையில் கைகோர்த்தனர். இதையடுத்து 2வது முறையாக கடந்த வாரம் தமிழகம் வருகை தந்த பிரதமர் மோடி புதுச்சேரி சென்று அங்கு ஆரோவிலில் நடந்த நிகழ்ச்சியில் பங்கேற்றார். தொடர்ந்து மதுரை திருப்பரங்குன்றம் கோவிலுக்கு சென்று வழிபட்டார். அதன் பின்னர் பிரமாண்ட பிரசார பொதுக்கூட்டத்திலும் பங்கேற்று பேசினார்.சட்டமன்ற தேர்தலுக்கு முன்பாக தமிழகத்தில் இன்னும் சில முக்கிய நகரங்களில் அவர் பிரசாரம் செய்ய திட்டமிட்டுள்ளார். அந்த வரிசையில் நாளை (11ந்தேதி, புதன் கிழமை) திருச்சியில் தேசிய ஜனநாயக கூட்டணியின் பிரசார பொதுக்கூட்டம் நடைபெறுகிறது. இதில் தமிழகத்தில் மூன்றாவது முறையாக பிரதமர் மோடி கலந்துகொள்கிறார். மேலும் கூட்டணி கட்சி தலைவர்களும் பங்கேற்கிறார்கள். இதற்காக திருச்சி பஞ்சப்பூரில் இடம் தேர்வு செய்யப்பட்டு 30 ஏக்கர் பரப்பளவில் பிரமாண்ட மேடை மற்றும் திடல் அமைக்கப்பட்டுள்ளது. இந்த பிரசார பொதுக் கூட்டத்திற்கு முன்பாக அதே பகுதியில் மத்திய அரசு விழா நடக்கிறது. இதில் இந்திய எண்ணெய் கழகம் சார்பில் சென்னை மணலியில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள லூப் ஆயில் திட்டம், குழாய் மூலம் வீடுகளுக்கு நேரடியாக சமையல் எரிவாயு இணைப்பு வழங்கும் திட்டம் ஆகியவற்றை தொடங்கி வைக்கிறார். மேலும் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் சார்பில் தமிழகத்தின் முக்கிய 4 வழிச் சாலைகளில் புதிதாக அமைக்கப்பட்ட சுரங்க பாதைகள் மற்றும் பெரம்பலூர், அரியலூர் மாவட்டங்களில் புதிதாக அமைக்கப்பட்ட 4 வழிச்சாலைகளை அவர் நாட்டுக்கு அர்ப்பணிக்கிறார்.இந்த நிகழ்ச்சியை முடித்துக் கொண்டு அதே பகுதியின் பின்புறம் மாலை 6.30 மணி முதல் இரவு 7.30 மணி வரை நடைபெறும் தேசிய ஜனநாயகக்கூட்டணி பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு பிரதமர் மோடி பேசுகிறார்.இந்த நிகழ்வுகளில் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, பா.ம.க. தலைவர் அன்புமணி, அ.ம.மு.க. பொதுச்செயலாளர் டி.டி.வி.தினகரன், த.மா.கா. தலைவர் ஜி.கே. வாசன் உள்ளிட்ட கூட்டணி கட்சி தலைவர்கள் பங்கேற்கிறார்கள்.பிரசார பொதுக்கூட்டத்திற்கு பின்னர் கார் மூலம் எடமலைப்பட்டி புதூர் வழியாக திருச்சி விமான நிலையம் செல்லும் பிரதமர் மோடி, அங்கிருந்து விமானத்தில் டெல்லி புறப்பட்டுச் செல்கிறார்.பிரதமர் வருகையை முன்னிட்டு திருச்சி மாவட்ட கலெக்டர் சரவணன் தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. அதைத்தொடர்ந்து பாதுகாப்பு அதிகாரிகள் பங்கேற்கும் கூட்டம் நடந்தது.இதற்கிடையே பிரதமரின் சிறப்பு பாதுகாப்பு குழு திருச்சி வந்தது. அதன் ஐ.ஜி. நவ்நீத்குமார் மேத்தா தலைமையில் வந்த அந்த குழுவினர் பஞ்சப்பூரில் அரசு நிகழ்ச்சி மற்றும் பொதுக்கூட்டம் நடைபெறும் இடத்தையும், ஹெலிபேடு தளத்தையும் ஆய்வு செய்தனர்.பின்னர் கார் மூலம் பிரதமர் மோடி செல்லும் வழித்தடத்தையும் அவர்கள் ஆய்வு செய்தனர். அதைத் தொடர்ந்து விமான நிலையம் மற்றும் பஞ்சப்பூரில் பாதுகாப்பு ஏற்பாடுகள் குறித்து ஆலோசனைகள் மேற்கொண்டு வருகிறார்கள். இந்த பாதுகாப்பு ஆலோசனை கூட்டத்தில் கலெக்டர் சரவணன், மாநகர போலீஸ் கமிஷனர் காமினி ஆகியோர் கலந்து கொண்டனர். பொதுக்கூட்டம் நடைபெறும் இடம் மற்றும் முன்னேற்பாடு பணிகளை பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், மத்திய மந்திரி எல்.முருகன், மாநில பொதுச் செயலாளர் கருப்பு முருகானந்தம், திருச்சி மாவட்ட தலைவர் ஒண்டிமுத்து உள்ளிட்ட நிர்வாகிகள் பார்வையிட்டு பணிகளை முடுக்கி விட்டுள்ளனர். இதற்கிடையே பிரதமர் மோடி வருகையை முன்னிட்டு திருச்சியில் பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பிரதமர் வருகையையொட்டி திருச்சி மாநகரில் இரண்டு நாட்கள் டிரோன்கள் மற்றும் ஆளில்லா சிறிய ரக விமானங்கள் பறக்க தடை விதிக்கப் பட்டுள்ளது.",

## ஒரே நாடு, ஒரே தேர்தல் என்பது நோயைவிட மோசமான மருந்து: மத்திய அரசுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கண்டனம்



சென்னை : மார்ச்.10–

ஒரே நாடு, ஒரே தேர்தல் என்பது நோயைவிட மோசமான மருந்து என்று ஒன்றிய அரசுக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கண்டனம் தெரிவித்துள்ளார். ஒன்றிய அரசின் ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டம் குறித்து பல்வேறு நாடுகளின் தேர்தல் முறையை ஒப்பிட்டு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவு :

*ஒரே நாடு ஒரே தேர்தல் என்பது ஒரு நோயைக் குணப்படுத்த அதைவிடக் கொடுமையான ஒரு மருந்தைத் தருவதற்கு சமம்.

*இது நமது நாடாளுமன்ற ஜனநாயகத்தின் அடிப்படையையே தலைகீழாக மாற்றும். நாடாளுமன்ற ஜனநாயகத்தையே கேலிக்கூத்தாக்கும் செயல் இது.

*தேர்தல்களை நடத்துவதில் இருக்கும் நிர்வாகச் சிக்கல்களுக்காக ஒட்டுமொத்த ஜனநாயகத்தையே முடக்க நினைப்பது தவறு.

*இது மெல்ல மெல்ல ஒரு ‘அதிபர் ஆட்சி’ முறைக்குத் தள்ளி, மக்கள் பிரதிநிதிகளின் பொறுப்புக்கூறலை நீர்த்துப்போகச் செய்துவிடும்.

*நிர்வாக வசதிக்காக அரசியலமைப்புச் சமநிலையையும், மக்களின் உரிமைகளையும் பலி கொடுக்கக் கூடாது.

*ஒரே நாடு ஒரே தேர்தல் என்பது மாநில சட்டமன்றங்களை பலவீனப்படுத்தும் செயல். இது கூட்டாட்சிக்கு முறைக்கு ஆபத்தை ஏற்படுத்தும்.

## மாநிலங்களவைத் தேர்தலில் தமிழ்நாட்டில் இருந்து போட்டியிட்ட 6 வேட்பாளர்களும் போட்டியின்றி தேர்வு!!

சென்னை: மார்ச்.10–

மாநிலங்களவைத் தேர்தலில் தமிழ்நாட்டில் இருந்து போட்டியிட்ட 6 வேட்பாளர்களும் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர். தமிழகத்தில் தம்பிதுரை (அதிமுக), ஜி.கே.வாசன் (தமாகா) மற்றும் திமுகவை சேர்ந்த என்.ஆர்.இளங்கோ, கனிமொழி சோமு, திருச்சி சிவா, பி.செல்வராசு ஆகியோரின் பதவிக்காலம் வரும் ஏப்ரல் 2ம் தேதியுடன் முடிவடைகிறது. இதையடுத்து, தமிழகம் உள்பட நாடு முழுவதும் காலியாக உள்ள 37 மாநிலங்களவை எம்பி பதவிகளுக்கான தேர்தல் கடந்த மாதம் அறிவிக்கப்பட்டது. வேட்புமனு தாக்கல் பிப்ரவரி 26ம் தேதி தொடங்கியது. வேட்புமனு தாக்கல் செய்ய மார்ச் 5ம் தேதி (நேற்று) கடைசி நாளாகும். வேட்பு மனுக்களை திரும்ப பெற மார்ச் 9ம் தேதி கடைசி நாளாகும். மார்ச் 16ம் தேதி தேர்தல் நடைபெறும் என்று தேர்தல் ஆணையம் அறிவித்து இருந்தது.

தற்போது தமிழகத்தில் உள்ள எம்எல்ஏக்களின் அடிப்படையில் திமுக 4 எம்.பிக்களையும், அதிமுக 2 எம்.பிக்களையும் தேர்வு செய்ய முடியும். அதன்படி தமிழகத்தில் காலியாக உள்ள 6 மாநிலங்களவை எம்.பி. பதவிகளுக்கு திருச்சி சிவா (திமுக), கான்ஸ்டன்டைன் ரவீந்திரன் (திமுக), கிறிஸ்டோபர் திலக் (காங்கிரஸ்), எல்.கே.சுதீஷ் (தேமுதிக), தம்பிதுரை (அதிமுக), அன்புமணி (பாமக) ஆகிய 6 பேர் வேட்புமனு தாக்கல் செய்தனர். இந்த நிலையில் இவர்கள் 6 பேரின் வேட்பு மனுக்களும் ஏற்கப்பட்டு, மற்ற வேட்பாளர்களின் மனுக்கள் தள்ளுபடி செய்யப்பட்டன. அதன் அடிப்படையில் வேட்பு மனுக்கள் ஏற்கப்பட்ட 6 பேரும் மாநிலங்களவைக்கு போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டனர்.

## தமிழகம் முழுவதும் 4,219 மையங்களில் 10ம் வகுப்பு பொதுத்தேர்வு நாளை தொடங்குகிறது

சென்னை: மார்ச். 10–

அரசு பொது தேர்வுகளை விரைவாக முடிக்கும் வகையில் பிளஸ் 2 தேர்வு கடந்த 2ந்தேதி தொடங்கி நடைபெற்று வருகிறது.இந்த நிலையில் 10ம் வகுப்பு பொதுத்தேர்வு நாளை 11ந்தேதி தொடங்கி ஏப்ரல் மாதம் 6ந்தேதி வரை நடைபெறுகிறது. இத்தேர்வினை 12,467 பள்ளிகளைச் சேர்ந்த 8 லட்சத்து 82 ஆயிரத்து 806 மாணவமாணவிகள் மற்றும் தனித்தேர்வர்கள் 26 ஆயிரம் பேர் என மொத்தம் 9 லட்சம் பேர் எழுதுகிறார்கள்.தமிழகம் முழுவதும் 4219 மையங்களில் தேர்வு நடைபெறுகிறது. தேர்வு மையங்களில் காப்பி அடித்தல், விடைத்தாள்களை மாற்றுதல் போன்ற ஒழுங்கின செயல்களை ஈடுபடுபவர்கள் மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று அரசு தேர்வுத்துறை எச்சரித்துள்ளது.மேலும் தமிழகம் முழுவதும் 4954 பறக்கும் படைகள் அமைக்கப்பட்டு கண்காணிக்கப்படுகிறார்கள். அனைத்து மாவட்ட முதன்மை கல்வி அதிகாரிகள் தலைமையில் தேர்வு மையங்கள் கண்காணிக்கப்படுகிறது. வினா தாள்கள் தேர்வுக்கு முன்னதாக வெளியாகாமல் இருக்கவும் தகுந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அந்தந்த மாவட்டங்களில் உள்ள மையங்களுக்கு விடைத்தாள்கள் அன்று காலையில் செல்வதற்கான ஏற்பாடுகள் கல்வி அதிகாரிகள் மூலம் செய்யப்பட்டுள்ளது. ஒவ்வொரு தேர்விற்கும் போதுமான இடைவெளி விடப்பட்டுள்ளது மாணவர்கள் அனைத்து தேர்வையும் படித்து எழுதுவதற்கு வசதியாக அதிக விடுமுறை கொடுக்கப்பட்டுள்ளது.",

## தமிழக கவர்னராக ஆர்.வி.ஆர்லேகர் 12ந்தேதி பதவி ஏற்பு",

சென்னை: மார்ச்.10–

தமிழக கவர்னர் ஆர்.என். ரவி, மேற்கு வங்க கவர்னராக நியமிக்கப்பட்டார்.

இதைத் தொடர்ந்து, கேரள கவர்னர் ஆர்.வி. ஆர்லேகர் தமிழக கவர்னர் பொறுப்பையும் கூடுதலாக கவனிக்குமாறு ஜனாதிபதி உத்தரவிட்டார்.இதை தொடர்ந்து ஆர்.வி.ஆர்லேகர் நாளை (புதன்கிழமை) சென்னைக்கு வருகிறார்.

அதே நாளில் ஆர்.என்.ரவி, தமிழக கவர்னர் பொறுப்பில் இருந்து விடுவிக்கப்பட்டு கொல்கத்தாவுக்கு புறப்பட்டுச் செல்கிறார். அவரை கவர்னர் மாளிகை அதிகாரிகளும், ஊழியர்களும் வழியனுப்பி வைக்கின்றனர்.

இதையடுத்து தமிழக கவர்னராக கூடுதல் பொறுப்பேற்கும் ஆர்.வி.ஆர்லேகர் 12ந்தேதி மதியம் 12 மணியளவில் பதவி ஏற்கிறார். ஐகோர்ட்டு தலைமை நீதிபதி எஸ்.ஏ. தர்மாதிகாரி அவருக்கு பதவிப் பிரமாணம் செய்துவைக்கிறார். இந்தப் பதவி ஏற்பு நிகழ்வு எளிமையாக நடைபெற உள்ளது.",

## கிருஷ்ணகிரி மாவட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு மூன்று சக்கர ஸ்கூட்டர்



கிருஷ்ணகிரி மாவட்டத்தை சார்ந்த 188 மாற்றுத்திறனாளிகளுக்கு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் உணவு மற்றும் உணவு பொருள் துறை அமைச்சர் ஸி சக்ரபானி கிருஷ்ணகிரி மேற்கு மாவட்ட கழக செயலாளர். ஒய்.பிரகாஷ் எம் எல் ஏ அவர்களும் மாவட்ட ஆட்சியர் ச. தினேஷ்குமார் அவர்களும் மூன்று சக்கர ஸ்கூட்டர் வாழங்கினர்.



சென்னையிலிருந்து விமானம் மூலம் திருச்சிராப்பள்ளி விமான நிலையத்திற்கு வருகை புரிந்த தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களை அமைச்சர் கே.என். நேரு பொன்னாடை வழங்கியும், அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி புத்தகம் வழங்கியும் வரவேற்றனர். அதேபோல் மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் புத்தகம் வழங்கி வரவேற்றார்.

# பெண்கள் தினத்தை முன்னிட்டு Saai Social Services சார்பில் புற்றுநோய் விழிப்புணர்வு கையேடு வெளியீடு.

கோவை மார்ச்:10

சாய் சமூக சேவை (Saai Social Services) என்ற அரசு சாரா அமைப்பு சமூகத்தில் பின்தங்கிய மக்களின் வாழ்க்கை தரத்தை உயர்த்தும் நோக்கில் பல்வேறு சமூக நலத் திட்டங்களை தொடர்ந்து செயல்படுத்தி வருகிறது. சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு கோயம்புத்தூர் ஹோப் காலேஜ் அருகிலுள்ள கிளஸ்டர் மீடியா கல்லூரியில் சமூக சேவையில் சிறந்து விளங்குபவர்களை கௌரவிக்கும் விழாவும்,புற்றுநோய் விழிப்புணர்வு கையேடு வெளியீட்டு விழாவும் நடைபெற்றது.




இந்த நிகழ்ச்சியில் Ln. Dr. Adv. N. ÜPõõè¡,Founder, Saai Social Services, S. சசிகலா, முன்னாள் மாவட்ட நீதிபதி, விஜயலட்சுமி, CEO,Aroma Group of Companies,டாக்டர் கோவர்த்தினி, MS,Plastic Surgeon, விஜயலட்சுமி பிச்சாண்டி, முன்னாள் விஞ்ஞானி,ISRO உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் போது பொது மக்களிடையே புற்றுநோய் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்ட புற்றுநோய் விழிப்புணர்வு கையேடு டாக்டர் கோவர்த்தினி அவர்களால் வெளியிடப்பட்டு,அதை முன்னாள் மாவட்ட நீதிபதி S. சசிகலா அவர்கள் பெற்றுக் கொண்டார். மேலும் சமூக நலனுக்காக அர்ப்பணிப்புடன் சேவை செய்து வரும் சிறந்த பெண்கள் மற்றும் சமூக சேவையாளர்களுக்கு "சேவைநாயகி 2026" விருதுகள் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

Saai Social Services அமைப்பு பெண்கள் முன்னேற்றம், பார்வை பரிசோதனை முகாம்கள், புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் மருத்துவ முகாம்கள், ஏழை எளிய குழந்தைகளுக்கு கல்வி வழங்குதல், ஆதரவற்றவர்களுக்கு உணவு வழங்குதல் போன்ற பல்வேறு மனிதநேய சேவைகளை செய்து வருகிறது.

குறிப்பாக பத்தாம் வகுப்பு முதல் கல்லூரி உயர்கல்வி வரை ஏழை எளிய மாணவ, மாணவிகளுக்கு Saai Social Services சார்பில் கட்டணமின்றி கல்வி வழங்கும் திட்டமும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

தற்போது புற்றுநோய் நோயாளிகள் அதிகரித்து வரும் நிலையில் பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் பல்வேறு மருத்துவ முகாம்கள் மற்றும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்த Saai Social Services 9994662582 திட்டமிட்டுள்ளது.

# திருப்பூர் வடக்கு,தெற்கு ஆகிய இரு சட்டமன்ற தொகுதிகள் ஒரு தொகுதி காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்க வேண்டும்!!



திருப்பூர், மார்ச் 10

இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி சார்பில் நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மாவட்ட தலைமை அலுவலகத்தில் மாநகர் மாவட்ட தலைவர் கோபால்சாமி தலைமையில் நடைபெற்றது

முன்னாள் மாவட்ட தலைவர் ஆர் கிருஷ்ணன் முன்னிலை வகித்தார் ஆலோசனை கூட்டத்தில் நடைபெற இருக்கின்ற 2026 ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலை முன்னிட்டு புதிய பொறுப்பாளர்கள் விருப்பமனு வாங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் 50க்கும் மேற்பட்ட நிர்வாகிகள் புதிய மனுவைப் பெற்று தங்களுக்கு தேவையான பொறுப்புகளை எழுதி மாவட்ட தலைவரிடம் ஒப்படைத்தனர் இதில் பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன அதில்

திருப்பூர் வடக்கு அல்லது தெற்கு சட்டமன்றத் தொகுதி காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்க வேண்டும்

சுதந்திர போராட்ட தியாகி நல்ல கண்ணு இரங்கல். பனியன் தொழிலாளர்களுக்கு நியாயமான சம்பள உயர்வு. மத்திய அரசால் உயர்த்தப்பட்ட கேஸ் சிலிண்டர் விலை உடனடியாக குறைக்க வேண்டும் உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டது இதில் நிர்வாகிகள் வி ஆர் ஈஸ்வரன். பாகனேரிரவீந்திரன். ஊடகப்பிரிவு ஷிகி.முகமதுகௌஸ், ஜெயினுலாபுதீன்.சாதிக். ஹாசன்.அரிமா வெங்கடேசன்.பாபு. தனபால்.சரவணன். மகிளா காங்கிரஸ் விக்டோரியா. சம்சாத் பேகம்.காஜா. கோபாலகிருஷ்ணன். சிவக்குமார்.அருள். கதிரேசன் ஜோதி.தேவசாமி.ராமு. சோஜன். கிருஷ்ணதாஸ். சுலைமான்.சேக். வேலுச்சாமி.பூபதி. சுந்தர்ராஜ். சண்முகசுந்தரம். பிரதீப்.டிவி.குமார். நடராஜ். முபாரக். சேக் தாவூத். பெப்சி கோவிந்தசாமி. மற்றும் மாநகர் மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்றனர்...

# செஞ்சி உதவும் உள்ளங்கள் அறக்கட்டளை சார்பில் மகளிர் தின விழா மாரத்தான்




விழுப்புரம், மார்ச். 10–

விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் இயங்கி வரும் உதவும் உள்ளங்கள் சாரிட்டபிள் டிரஸ்ட் சார்பில் செஞ்சியில் மகளிர் தின மாரத்தான் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் சுமார் 500க்கும் மேற்பட்ட மகளிர் கலந்து கொண்டனர். முதல் மூன்று இடங்களைப் பிடித்தவர்களுக்கு முதல் பரிசு ரூ. 5000/, இரண்டாம் பரிசு ரூ. 2000/, மூன்றாம் பரிசு 1000/ வழங்கப்பட்டது. முதல் 10 இடங்கள் பிடித்தவர்களுக்கும் ஆறுதல் பரிசு அளிக்கப்பட்டது. மேலும் அதிக வயது உடையோருக்கும் மற்றும் மிகக் குறைந்த வயது உடையவருக்கும் சிறப்பு பரிசுகள் வழங்கப் பட்டது. போட்டியில் கலந்து கொண்ட அனைவருக்கும் சான்றிதழ் மற்றும் மெடல் வழங்கப்பட்டது. இந்த நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட இல்லோடு முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் ஜானகி ஸ்டாலின் கூறியதாவது : பெண்கள் எல்லாத் துறைகளிலும் சாதித்து வருகின்றனர். அதேபோன்று விளையாட்டிலும் இன்றளவிலும் சாதித்து வருகின்றனர். இன்று மாரத்தானில் கலந்து கொண்ட அனைத்து பெண்களுக்கும் உலக மகளிர் தின வாழ்த்துக்களை கூறினார். மேலும் இந்த நிகழ்ச்சியில் முட்டத்தூர் சுரேந்தர் நமது சிலம்பம் குழு மாணவர்கள் வீர சாகச நிகழ்ச்சிகள், சிலம்பம், வாள் சண்டை மற்றும் அடிமுறை போன்ற தமிழர்களின் பாரம்பரிய கலைகளை நிகழ்த்தி காட்டினர்.

நிகழ்ச்சியில் மேலச்சேரி, தமிழன் சீனு, ஆக்ருதி பள்ளி ஆசிரியை பரமேஸ்வரி, டாக்டர் ஜோதி, கோகுல் டிஜிட்டல் உரிமையாளர் ஜெயந்தி சுந்தர், கவுன்சிலர் கம்சலா, செஞ்சி ஆய்வாளர், லயன்ஸ் கிளப் தலைவர் நவநீதகிருஷ்ணன், செஞ்சி சிறப்பு வருவாய் ஆய்வாளர் கண்ணன், செஞ்சி வழக்கறிஞர் சக்திராஜன், அப்பம்பட்டு சையது ஸ்வீட் மிட்டாய் சையது உஸ்மான், வழக்கறிஞர் வெற்றிச்செல்வன், செஞ்சி சேவை தமிழ் லாரான்ஸ், தினேஷ், தவெக துணை நகர செயலாளர் ராஜேஷ் மற்றும் ராஜசேகர், ஜெயசீலன், கிளாட்வின், இசக்கின், ராஜேஷ், ஹீனா, மற்றும் பலர் கலந்து கொண்டனர். உதவும் உள்ளங்கள் அறக்கட்டளை நிறுவனர் ஜான் சத்தியசீலன் நன்றியுரை கூறினார்.

# செக் மோசடி ஏமாற்றியவருக்கு ஓராண்டு மெய்காவல் தண்டனை. மணப்பாறை நீதிமன்றம் தீர்ப்பு.

மணப்பாறை, மார்ச், 10:

திருச்சி மாவட்டம் மணப்பாறையில், செக் மோசடி செய்த நபருக்கு ஓராண்டு மெய்காவல் தண்டனை வழங்கி மணப்பாறை குற்றவியல் நீதிமன்றம் தீர்ப்பு அளித்துள்ளது.

மணப்பாறை அடுத்த கே.பெரியப்பட்டி கிராமம், அழகிரிரெட்டியப்பட்டி கிராமத்தை சேர்ந்தவர் பச்சைமுத்து மகன் பாலசுப்பிரமணி. இவரிடமிருந்து புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை வட்டம் பாரப்பட்டியை சேர்ந்த அந்தோனிசாமி மகன் ஆரோக்கியசாமி என்பவர், தனது தேவைக்காக கடந்த 2022 செப்டம்பர் 27ஆம் தேதியன்று பணம் ரூ.7,00,000/தை கடனாக பெற்றாராம். கடனை திருப்பி செலுத்தாமல் பாலசுப்பிரமணிக்கு, வங்கி கணக்கு செக் கொடுத்துள்ளார். பாலசுப்பிரமணி அதை வங்கி கணக்கில் செலுத்தியுள்ளார். வங்கியில் பணம் இல்லாமல் செக் கொடுத்தது தெரியவந்ததால், ஆரோக்கியசாமி மீது பாலசுப்பிரமணி மணப்பாறை குற்றவியல் நீதிமன்றதில் வழக்கு தாக்கல் செய்து. மாற்று முறை ஆவணச்சட்டம் 138 NIAct ன் படி STC. No. 31/2023 ஆக நீதிமன்ற விசாரணைக்கு எடுக்கப்பட்டு விசாரணை நடைபெற்று வந்தது. வழக்கில் ஆரோக்கியசாமியை மாற்று முறை ஆவணங்கள் சட்டம் பிரிவு 138 ன் கீழ் குற்றவாளி என்று தீர்மானித்து குற்ற விசாரணை முறைச்சட்டம் பிரிவு. 255 (2) கீழ் ஆரோக்கியசாமிக்கு ஒரு வருடம் மெய் காவல் சிறை தண்டனை விதித்து மணப்பாறை குற்றவியல் நடுவர் ஆர்.அசோக்குமார் தீர்ப்பளித்தார். மேலும் ஒரு மாத காலத்திற்குள் வழக்கு செக் தொகை ரூபாய் 7,00,000/ குற்ற விசாரணை முறை சட்டம் பிரிவு 357(3)ன் கீழ் ஆரோக்கியசாமி நஷ்ட ஈடாக பாலசுப்பிரமணிக்கு கொடுக்க வேண்டும் என்றும் தவறும் பட்சத்தில், ஆரோக்கியசாமி மேலும் 6 வார காலம் மெய் காவல் சிறை தண்டனை விதித்தும் தீர்ப்பு பகரப்பட்டது.

# ஒசூர் அருகே பிரபல டாட்டா எலக்ட்ரானிக்ஸ் தொழிற்சாலையில் காவலாளிகளைக் கட்டிப்போட்டு துப்பாக்கி, காப்பர் வயர்களை கொள்ளையடித்த கும்பல்

ஒசூர் அருகே பிரபல டாட்டா எலக்ட்ரானிக்ஸ் தொழிற்சாலையில் பணி புரியும் காவலர்களை கட்டிப்போட்டு துப்பாக்கி, காப்பர் வயர்களை கொள்ளையடித்துச் சென்ற 5 பேர் கொண்ட கும்பலை போலீஸார் தேடி வருகின்றனர். கிருஷ்ணகிரி மாவட்டம், ஒசூரை அடுத்த உத்தனப்பள்ளி லாலிக்கல் பகுதியில் டாடா குழுமத்திற்கு சொந்தமான எலக்ட்ரானிக் தொழிற்சாலை செயல்பட்டு வருகிறது. இந்தியாவின் பல்வேறு மாநிலங்களை சேர்ந்த தொழிலாளர்கள் இங்கு பணிபுரிந்து வருகின்றனர். இந்த தொழிற்சாலையில் புதிதாக ஏ.சி. பொருத்துவது, ஏ.சி. சர்வீஸ் செய்வது மற்றும் ஏ.சி. சம்பந்தமான அனைத்து பிரச்னைகளையும் கையாளுவதற்காக தொழிற்சாலையின் உள்ளேயே தனியாக கட்டடம் ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் ஏ.சி. சம்பந்தமான பொருள்கள் வைக்கப்பட்டிருந்தது. அதற்கு இரண்டு பேர் துப்பாக்கி ஏந்திய காவலாளிகள் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர். இந்த நிலையில், வெள்ளிக்கிழமை அதிகாலை 1 மணி அளவில் 5 பேர் கொண்ட கும்பல் டாடா தொழிற்சாலைக்குள் புகுந்தனர். அவர்கள், அங்கு பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பிகார் மாநிலத்தைச் சேர்ந்த குல்பீர் அகமது (48), கெலமங்கலம் அருகே உள்ள உள்ளுக்குறுக்கை கிராமத்தைச் சேர்ந்த சரவணன் (36) ஆகிய 2 பேரையும் தாக்கி அவர்களை கயிற்றால் கட்டினர். மேலும், அங்கிருந்த காப்பர் மற்றும் விலை உயர்ந்த பொருள்களை கொள்ளையடித்தனர். அத்துடன் காவலாளி வைத்திருந்த ஒற்றை குழல் துப்பாக்கி ஒன்றையும் கொள்ளையடித்து சென்றனர். கொள்ளை போன பொருள்களின் மதிப்பு ரூ. 5 லட்சம். இந்த நிலையில் வெள்ளிக்கிழமை காலை அந்த வழியாக சென்றவர்கள் 2 காவலாளிகளும் கயிற்றால் கட்டி போடப்பட்டிருப்பதை கண்டு அதிர்ச்சி அடைந்தனர். அவர்கள் கழற்றி அவிழ்த்துவிட்டு நடந்த சம்பவம் குறித்து காவலாளிகளிடம் கேட்டனர். மேலும், இதுகுறித்து உத்தனப்பள்ளி காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்தனர். போலீஸார் சம்பவ இடத்திற்கு சென்று விசாரணை நடத்தினர். மேலும் நிறுவன வளாகத்தில் வைக்கப்பட்டுள்ள சிசிடிவி கேமராக்களையும் ஆய்வு செய்தனர். கொள்ளையடித்த 5 பேர் கொண்ட கும்பலை போலீஸார் தேடிவருகின்றனர். உத்தனப்பள்ளி அருகே பிரபல தனியார் தொழிற்சாலையில் காவலாளிகளைக் கட்டிபோட்டு துப்பாக்கி, காப்பர் மற்றும் பொருள்களை கொள்ளையடித்து சென்ற சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

# சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரியில் விளையாட்டு விழா




கோவை மார்ச்:10

கோவை சரவணம் பட்டி பகுதியில் உள்ள சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரியில் 2025 2026 ஆம் கல்வி ஆண்டுக்கான விளையாட்டு விழா சங்கரா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்றது.கோவை பாரதியார் பல்கலைக் கழக உடற்கல்வித்துறை பேராசிரியர் மற்றும் வெளிவிவகார இயக்குனர் முனைவர் அன்பழகன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு கொடியேற்றி துவக்கி வைத்தார்.

மாணவர்களின் அணி வகுப்பு அனைவரையும் கவர்ந்த்து விளையாட்டுத் திறனை வெளிப்படுத்தும் வகையில் ஒலிம்பிக் தீபம் ஏற்றி விழா துவங்கப் பட்டது. சிறப்பு விருந்தினர் கூறுகையில், விளையாட்டு ஒற்றுமையையும் ஒழுக்கத்தையும் கடைப்பிடிக்கவேண்டும். வெற்றி தோல்வியைத் தாண்டி போட்டிகளில் அர்ப்பணிப்புடன் மாணவர்களை பங்கேற்குமாறு ஊக்குவித்தார்.

மேலும் 4ஜ்100 மீட்டர் தொடர் ஓட்டம் (ஆண்கள் மற்றும் பெண்கள்) இறுதிப் போட்டிகள் நடத்தப்பட்டது.சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரியின் உடற்கல்வித்துறை இயக்குனர் முனைவர். சி.பாலசுப்பிரமணி ஆண்டறிக்கையை வாசித்தார்.

சங்கரா அறிவியல் மற்றும் வணிகவியல் கல்லூரியின் துணை இணைச்செயலர் திருமதி நித்யா ராமச்சந்திரன் விழாவிற்கு தலைமை தாங்கி சிறப்பு விருந்தினருக்கு நினைவுப் பரிசு வழங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் வி.ராதிகா வாழ்த்துரை வழங்கினார்.துணை முதல்வர் முனைவர் பெர்னார்ட் எட்வர்ட் முன்னிலை வகித்தார்.

மேலும் பல்வேறு பிரிவுகளாக நடத்தப் பட்ட விளையாட்டு போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார்.ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தை இளங்கலை மேலாண்மைத்துறை (BBACA) மாணவாகளும் இரண்டாவது ஒட்டு மொத்த சாம்பியன் பட்டத்தை B.Com CA) இளங்கலை வணிகவியல் கணினிப் பயன்பாட்டியல் துறை மாணவாகளும் தட்டிச் சென்றனர்.கல்லூரியின் உடற்கல்வித் துறை இயக்குனர் முனைவர். சி.பாலசுப்பிரமணி நன்றியுரையாற்றினார்.

# சேலத்தில் ரூ.15 லட்சத்தை இழந்த கூலித்தொழிலாளி தற்கொலை வேலைக்கு செல்லாமல் நாள் முழுக்க சூதாட்டம்.

சேலம், மார்ச்.10–

சேலத்தில் ஆன்லைன் சூதாட்டத்தில் ரூ.15 லட்சம் இழந்த இளைஞர் மனமுடைந்து தற்கொலை செய்த சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சேலம் மாவட்டத்தில் உள்ள தாரமங்கலம், கருக்கல்வாடி சஞ்சீவிராயன் கோவில் பகுதியில் வசித்து வருபவர் பிரகாஷ்ராஜ் (வயது 28). இவர் கூலித்தொழிலாளியாக வேலை செய்து வருகிறார். இவரின் மனைவி சுகன்யா. கடந்த ஒன்றரை ஆண்டுகளுக்கு முன்பு இருவரும் திருமணம் செய்து கொண்டு மகிழ்ச்சியாக வாழ்ந்து வந்த நிலையில், திருமணத்திற்கு முன்பே பிரகாஷ்ராஜ் ஆன்லைன் சூதாட்டத்தில் ஈடுபடும் பழக்கத்தை கொண்டிருந்ததாக கூறப்படுகிறது.

நாள் முழுக்க சூதாட்டம்: இதனால் ரூ.15 லட்சம் வரை பணத்தை இழந்ததாகவும் கூறப்படுகிறது. இந்த விஷயம் குறித்து சுகன்யா கணவரிடம் விசாரித்து ஆன்லைன் சூதாட்ட பழக்கத்தை கைவிடுமாறு கூறி வற்புறுத்தி இருக்கிறார். மேலும் ரூ.15 வரை இழந்தது போதும் அதற்குமேல் இழக்க வேண்டாம் என்று கூறியிருக்கிறார். ஆனால் மனைவியின் அறிவுரையை கேட்காத பிரகாஷ்ராஜ் வேலைக்கு செல்லாமல் சூதாட்டத்தில் ஈடுபட்டு வந்துள்ளார்.

குடும்பத்தகராறு: இதனால் தம்பதிகளுக்கு இடையே குடும்பத்தகராறு ஏற்பட்ட நிலையில், மனமுடைந்த பிரகாஷ்ராஜ் திடீரென வீட்டிற்கு சென்று உள்பக்கமாக தாழிட்டுள்ளார். சிறிது நேரம் கழித்து மனைவி சுகன்யா கதவை திறக்குமாறு கூறிய நிலையில், அவர் கதவை திறக்காததால் பதறியவர் அக்கம்பக்கத்தினர் உதவியுடன் கதவை உடைத்துள்ளார்.

இளைஞர் தற்கொலை: இதனை தொடர்ந்து உள்ளே சென்று பார்த்த நிலையில் பிரகாஷ்ராஜ் தூக்கிட்டு தற்கொலைக்கு முயன்றது தெரியவந்துள்ளது. உடனடியாக அவரை மீட்டு மருத்துவமனைக்கு கொண்டு சென்றபோது அவரின் உயிரிழப்பு உறுதி செய்யப்பட்டது. பின்னர் காவல்துறையினருக்கு தகவல் தெரிவிக்கப்படவே, அவரது உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக அனுப்பி வைத்த தாரமங்கலம் காவல்துறையினர் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சூதாட்டத்தால் தொடரும் உயிரிழப்புகள்: ஆன்லைன் சூதாட்டம் காரணமாக அடுத்தடுத்து பலரும் உயிரிழந்து வரும் நிலையில், திருமணமான ஒன்றரை வருடத்தில் நடந்துள்ள இந்த சோகம் குடும்பத்தையே சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.




பரமக்குடி தெற்கு பள்ளியில் வளர்பிறை இஸ்லாமிய இளைஞர் சங்கத்தின் சார்பில் இஃப்தார் நோன்பு திறக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது இதில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் நகர் மன்ற தலைவர் மற்றும் நகர் மன்ற உறுப்பினர்கள் மற்றும் அஇஅதிமுக மாவட்ட செயலாளர் மற்றும் காங்கிரஸ் கட்சியினர் மற்றும் சமூக ஆர்வலர்கள் மற்றும் சமுதாய பிரமுகர்கள் பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்

# புதுச்சேரியில் பெண் தலைமையில் மக்களுக்கான ஆட்சி அமைந்தால்தான் புதுச்சேரியை காப்பாற்ற முடியும்

## மகளிர் தின விழாவில் ஆர்.எல். வெங்கட்ராமன் ஆவேச பேச்சு.!!!.





புதுச்சேரி, மார்ச். 10–

புதுச்சேரி ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் சார்பில் சர்வதேச மகளிர் தின விழா கழகத்தின் தலைமை அலுவலகத்தில் காலை 10 மணி அளவில் கொண்டாடப்பட்டது. கூட்டத்திற்கு ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மாநில மகளிர் அணி தலைவி திருமதி வாசுகி அவர்கள் தலைமை தாங்கினார். சிவக்குமாரன், கோமதி, கவிதா, சாந்தி , மகளிரணி துணை தலைவி ரூபிணி, பொது செயலாளர் கீதா, செயலாளர் அமுதா ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சர்வதேச மகளிரணி விழாவிற்கு சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்ட, சரண் தொண்டு நிறுவனத் தலைவர் திருமதி. மு.லாவண்யா அவர்கள் பேசும்போது ,பெண்கள் தான் இந்நாட்டின் கண்கள் என்றும், தமிழகத்தின் முன்னாள் முதல்வர் ஜெயலலிதா தான் எனது ரோல் மாடல் என்றும் மக்களுக்கு சேவை செய்யவே நான் அரசியலுக்கு வந்தேன் அந்த வகையில் புதுச்சேரியில் ஐயா ஆர்.எல். வெங்கட்ராமன் அவர்களின் மக்களுக்கான சேவை பாராட்டுக்குரியது என்று சிறப்புரை ஆற்றினார். ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மாநில தலைவர் திருமதி . வாசுகி அவர்கள் தனது சொந்த செலவில் ஏற்பாடு செய்திருந்த ஹாட் பேக்கை திருமதி. மு. லாவண்யா அவர்கள் கூட்டத்தில் கலந்து கொண்ட அனைத்து மகளிருக்கும் கொடுத்து கௌரவித்தார்.

மகளிர் தின விழாவில் ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகத்தின் மாநில தலைவர் ஆர் எல் வெங்கட்ராமன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார் . அப்போது புதுச்சேரியில் நடைபெறும் மக்கள் விரோத ஆட்சிக்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டும் என்றால் , 2026 தேர்தலில் ஒரு பெண் தலைமையில் மக்களுக்கான ஆட்சி அமைய வேண்டும் என்று ஆவேசமாக பேசினார்.

புதுச்சேரியில் 70 ஆண்டு காலமாக ஆட்சி செய்த அரசியல் கட்சிகள் மக்களை ஏமாற்றி பிழைப்பு நடத்தி வந்துள்ளது என்பதை மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். ஏராளமான மது கடைகளை திறந்து புதுச்சேரியை மதுச்சேரியாக மாற்றி பெண்களை விதையாக்கி உள்ளனர். அதற்கும் மேலாக பெண்களையும் விட்டு வைக்காமல் சுற்றுலா வளர்ச்சி என்ற பெயரில் அதிகப்படியான ரெஸ்டோ பார்கள் உருவாக்கி பெண்களுக்கு குடிக்கும் பழக்கத்தை ஏற்படுத்தி கலாச்சார சீரழிவை ஏற்படுத்தி உள்ளனர். மதுபான தொழிற்சாலைகளுக்கு அனுமதி கொடுத்து நிலத்தடி நீரை கெடுத்து வைத்துள்ளனர். போலி மருந்து தொழிற்சாலைகளுக்கு அனுமதி கொடுத்து மக்கள் உயிரோடு விளையாடினர். இந்த ஆட்சியில் வேலைவாய்ப்பை உருவாக்கியுள்ளோம் என்று கூறும் முதல்வர் ரங்கசாமிக்கு மக்கள் வேலை வாய்ப்புக்காக புதுச்சேரி முழுவதும் போராட்டக் களமாக மாறி சட்டம் ஒழுங்கு சீர்கெட்டு இருப்பது தெரியவில்லையா. ஒட்டு மொத்தமாக இந்த மக்கள் விரோத ஆட்சி அகற்றப்பட வேண்டும். புதுச்சேரியில் பெண் வாக்காளர்கள்தான் அதிகம் . ஆகவே அனைத்து பெண்கள் வாக்கு என்கிற ஆயுதத்தை பயன் படுத்தி மக்கள் விரோத ஆட்சியை அகற்றி மக்களுக்கான ஆட்சியை உருவாக்க ஒரு பெண் தலைமையில் ஆட்சி அமைய வேண்டும். அதற்கு ஆர் எல் வி மக்கள் முன்னேற்றக் கழகம் என்றுமே வழிகாட்டியாக இருக்கும் என்று ஆவேசமாக பேசினார்.

கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் கோமதி அவர்கள் நன்றி தெரிவித்தார்.

கூட்டத்தில் இளைஞர் அணி அமைப்பாளர் ராஜா, முத்தியால்பேட்டை தொகுதி தலைவர் சிவகாமி, ராஜ்பவன் தொகுதி தலைவர் தாயாரம்மா, மணவெளி தொகுதி தலைவர் தனலட்சுமி ஊசுடு தொகுதி தலைவர் காமாட்சி , சரளா, அமலா,உமா, ப்ரீத்தி, பிரகாஷ், பரினா ஆகியோர் கலந்து கொண்டவர்களில் முக்கியமானவர்கள்.

# புதுச்சேரி மாநில இளஞ்சிறுத்தை எழுச்சிப் பாசறை செயலாளராக செல்வ புஷ்பலதா நியமனம்: திருமாவளவன் வாழ்த்து!



புதுச்சேரி: மார்ச்.10–

விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் புதுச்சேரி மாநில இளஞ் சிறுத்தை எழுச்சிப் பாசறையின் மாநிலச் செயலாளராக செல்வ புஷ்பலதா அவர்களை, கட்சியின் தலைவர் தொல். திருமாவளவன் முறைப்படி நியமித்துள்ளார்.

புதுவை உழவர்கரையைச் சேர்ந்த செல்வ புஷ்பலதா, கடந்த 8 ஆண்டுகளாக விசிகவின் மகளிர் அமைப்பான 'மகளிர் விடுதலை இயக்கத்தின்' துணைச் செயலாளராகப் பணியாற்றிய அனுபவம் கொண்டவர். இவர் சில முக்கிய உலக சாதனைகளுக்காகவும் அறியப்படுகிறார்:

கடலூரில் நடைபெற்ற நிகழ்வில், 3100 கட்சித்தொண்டர்களைக் கொண்டு "பனைமுகம் திருமூகம்" என்ற தலைப்பில் டாக்டர் அம்பேத்கரின் உருவத்தை உருவாக்கினார்.

10,600 பனை விதைகளைக் கொண்டு கட்சியின் தலைவர் திருமாவளவனின் உருவத்தை வரைந்து 'யுனிவர்சல் புக் ஆஃப் ரெக்கார்ட்ஸ்' அங்கீகாரத்தைப் பெற்றார்.

சென்னையில் உள்ள கட்சித் தலைமை அலுவலகத்தில் தலைவர் திருமாவளவனைச் சந்தித்து செல்வ புஷ்பலதா வாழ்த்துப் பெற்றார். இந்தச் சந்திப்பின் போது அவருக்கு பணி நியமனக் கடிதம் வழங்கப்பட்டது.

இந்த நியமனத்தைத் தொடர்ந்து, புதுச்சேரி வந்தடைந்த அவருக்கு விசிக நிர்வாகிகள் மற்றும் தொண்டர்கள் சார்பில் சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது. விசிக முதன்மைச் செயலாளர் அரிமாத்தமிழன், அமைப்புச் செயலாளர்கள் தமிழமாறன், ஆதவன், தலைமை நிலையச் செயலாளர் செல்வ நந்தன் உள்ளிட்ட பல முக்கிய நிர்வாகிகள் அவருக்குத் தங்களது வாழ்த்துக்களைத் தெரிவித்து வருகின்றனர்.

## மீனவர்களின் வயிற்றில் அடிக்கும் அதிகாரிகள் !

# 500 ஆதரவாளர்களுடன் துறைமுக அலுவலகத்தை அதிரடியாக முற்றுகையிட்ட அன்பழகன்!



புதுச்சேரி: மார்ச்.10–

புதுச்சேரி மீனவர்களின் வாழ்வாதாரத்தைப் பாதிக்கும் வகையில் செயல்படும் அதிகாரிகளைக் கண்டித்தும்,படகு போக்குவரத்து உரிமத்தை ரத்து செய்ய அனுப்பப்பட்ட கடிதத்தைத் திரும்பப் பெற வலியுறுத்தியும், அதிமுக மாநிலச் செயலாளர் அன்பழகன் தலைமையில் நேற்று அதிரடி முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது.

நேற்று காலை புதுச்சேரி துறைமுகத்தில் உள்ள அலுவலகத்தை 500க்கும் மேற்பட்ட மீனவர்கள் மற்றும் அதிமுக தொண்டர்களுடன் அன்பழகன் அவர்கள் முற்றுகையிட்டார். அதிகாரிகளின் தன்னிச்சையான போக்கைக் கண்டித்து விண்ணதிர முழக்கங்கள் எழுப்பப்பட்டன. கார்ப்பரேட் நிறுவனங்களுக்கு ஆதரவாகச் செயல்படும் அதிகாரிகளுக்கு எதிராகப் போராட்டம் தீவிரமடைந்ததால் அந்தப் பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

மீனவர்களின் படகு போக்குவரத்து உரிமத்தை ரத்து செய்ய அனுப்பப்பட்ட கடிதத்தை உடனடியாகத் திரும்பப் பெற வேண்டும்.

முதலமைச்சர் மற்றும் துறை அமைச்சருக்குத் தெரியாமல், மீனவர்களுக்கு எதிராகக் கடிதம் அனுப்பிய அதிகாரிகள் மீது கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

உரிமம் புதுப்பிக்க வரும் மீனவர்களிடம் தேவையற்ற கேள்விகளைக் கேட்டு அலைக்கழிப்பதை நிறுத்த வேண்டும். முற்றுகைப் போராட்டத்தின் போது செய்தியாளர்களிடம் பேசிய திரு. அன்பழகன், "மீனவர்களின் வயிற்றில் அடிக்கும் வகையில் சில அதிகாரிகள் கார்ப்பரேட் நிறுவனங்களிடம் பேரம் பேசிக் கொண்டு செயல்படுகின்றனர். முதலமைச்சர் இதைப் பற்றித் தெரியாது என்று கூறினாலும், உள்ளே இருக்கும் அதிகாரிகள் வேண்டுமென்றே அரசுக்குக் கெட்ட பெயர் ஏற்படுத்தச் சதி செய்கின்றனர். மீனவர்களின் உரிமையை மீட்கும் வரை இந்தப் போராட்டம் ஓயாது," எனத் தெரிவித்தார்.

இந்த முற்றுகைப் போராட்டத்தைத் தொடர்ந்து, அரசு தரப்பில் அதிகாரிகள் பேச்சுவார்த்தைக்கு முன்வந்துள்ளனர். இந்த விவகாரத்தில் துணைநிலை ஆளுநரும், முதலமைச்சரும் உடனடியாகத் தலையிட்டு நிரந்தரத் தீர்வு காண வேண்டும் எனப் போராட்டக் காரர்கள் வலியுறுத்தியுள்ளனர்.

# வில்லியனூர் ஜி.என்.பாளையத்தில் ரூ.24 லட்சம் செலவில் புதிய மின்மாற்றி எதிர்க்கட்சித் தலைவர் இரா. சிவா இயக்கி வைப்பு





புதுச்சேரி, மார்ச்.10–

புதுச்சேரி மாநிலம், வில்லியனூர் சட்டமன்றத் தொகுதி, ஜி.என்.பாளையம் கிராம மக்களின் மின் தேவையை கருத்தில் கொண்டு, மின்துறை மூலம் ரூ. 24 லட்சம் செலவில் 200 கிலோ வாட் திறன் கொண்ட புதிய மின் மாற்றி வெண்ணிசாமி நகரில் அமைக்கப்பட்டு, அதனை மக்கள் பயன்பாட்டிற்கு இயக்கி வைக்கும் நிகழ்ச்சி நேற்று மாலை 6.00 மணிக்கு நடைபெற்றது.

இதில் தொகுதி சட்டமன்ற உறுப்பினரும், எதிர்க்கட்சித் தலைவருமான இரா. சிவா அவர்கள் கலந்து கொண்டு, கூடுதல் திறன் கொண்ட புதிய மின்மாற்றியை மக்கள் பயன்பாட்டிற்கு இயக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில், மின் துறை செயற்பொறியாளர் பன்னீர்செல்வம், உதவிப் பொறியாளர் சந்திரசேகர், இளநிலைப் பொறியாளர் ஸ்டாலின், ஊழியர்கள் குமரேசன், கோபால், வேலவன், கார்த்திகேயன், சமுதாயராஜன், மகேஷ் மற்றும் ஊர் முக்கியஸ்தர்கள் ஏழுமலை, துளசிதாசன், முருகையன், முத்துக் குமரன், செழியன், கலைவாணன், சீனுவாசன், கார்த்திகேயன், ராஜா ராம், பரணி, வெங்கடேசன், சிவராமன், முருகன், ராமமூர்த்தி, திமுக தொகுதி செயலாளர் மணிகண்டன், வர்த்தகர் அணி அமைப்பாளர் ரமணன், துணை அமைப்பாளர் சரவணன், பொருளாளர் கந்தசாமி, கிளைக் கழக நிர்வாகிகள் கமல்பாஷா, பாலா, முருகன், மாணவர் அணி கோபி, மோகன், சந்தோஷ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# கிருஷ்ணகிரி மாவட்டத்தில் உள்ள தளி அருகே புதையல் வேட்டை: 4 பேர் கைது

தளி: மார்ச்.10–

கிருஷ்ணகிரி மாவட்டம், தளி அருகே கும்ளாபுரம் பகுதியில் தனியார் நிலத்தில் உள்ள பாறையில் புதையல் எடுக்க முயன்ற விவசாயி மாருதி(37), வேணு(38), லாவண்யா(39), சஞ்சய்குமார்(24) ஆகிய நான்கு பேரை தளி போலீசார் கைது செய்தனர். பாறையை உடைக்க பயன்படுத்த வைத்திருந்த வெடிபொருட்களையும் போலீசார் பறிமுதல் செய்தனர்.

இது குறித்தும் போலீசார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# திருவள்ளூர் மாவட்டத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதித் திட்டத்திற்கு குறை தீர்ப்பாளர் நியமனம் :

## மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தகவல் :

திருவள்ளூர் மார்ச் 10 :

திருவள்ளூர் மாவட்டத்தில், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி திட்டத்தில் குறை தீர்ப்பதற்காக, குறை தீர்ப்பாளராக ஆண்டனி சிலுவை என்பவர் ஆணையர், ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, சென்னை அவர்களால் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

இத்திட்டம் தொடர்பாக குறைபாடுகள் இருப்பின் அவருடைய கைபேசிஎண்:8925811340 மற்றும் மின்னஞ்சல் ombudsmanmgtlr@gmail.com மூலமாக தொடர்பு கொள்ளலாம் என மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

# சாலை ஓரங்களில் உள்ள தெருவிளக்குகள் நீண்ட நாட்களாக எரியாமல் பழுது இரவு நேரங்களில் போதிய வெளிச்சமின்றி பொதுமக்கள் அவதி

கிருஷ்ணகிரி, மார்ச்.10–

கிருஷ்ணகிரி மாவட்டம், போச்சம்பள்ளி தாலுகாவிற்கு உட்பட்ட வெப்பாலம்பட்டி ஊராட்சி, வன்னியபுரம் கிராமத்தில் சாலை ஓரங்களில் உள்ள தெருவிளக்குகள் நீண்ட நாட்களாக எரியாமல் பழுதடைந்து காணப்படுகின்றன. இதனால் ஒட்டுமொத்த குடியிருப்பு பகுதியும் இரவு நேரங்களில் போதிய வெளிச்சமின்றி இருள் சூழ்ந்து காணப்படுகிறது.

பொதுமக்கள் அவதி

இந்த கிராமத்தில் தெருவிளக்குகள் எரியாத காரணத்தால், இரவு நேரங்களில் வெளியே நடமாட பொதுமக்கள் பெரும் சிரமத்திற்கு ஆளாகி வருகின்றனர்.

பணி முடிந்து இரவு தாமதமாக வீடு திரும்புவோர் அச்சத்துடன் செல்ல வேண்டியுள்ளது.

முதியவர்கள் மற்றும் குழந்தைகள் இருட்டில் தவறி விழும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

விஷ ஜந்துக்கள் நடமாட்டம்

கிராமத்தைச் சுற்றியுள்ள பகுதிகளில் புதர்கள் மண்டி இருப்பதாலும், போதிய வெளிச்சம் இல்லாததாலும் இரவு நேரங்களில் பாம்பு, தேள் போன்ற விஷ ஜந்துக்களின் நடமாட்டம் அதிகரித்துள்ளது. இதனால் எப்போது என்ன நேருமோ என்ற அச்சத்திலேயே வன்னியபுரம் கிராம மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

சமூக ஆர்வலர்கள் கோரிக்கை

இது குறித்து ஊராட்சி நிர்வாகத்திடம் பலமுறை முறையிட்டும் இதுவரை எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அப்பகுதி மக்கள் வேதனை தெரிவிக்கின்றனர். எனவே, சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் உடனடியாக தலையிட்டு

பழுதடைந்த தெருவிளக்குகளை போர்க்கால அடிப்படையில் சீரமைக்க வேண்டும்.

புதிய மின் விளக்குகளைப் பொருத்தி கிராம மக்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும்.

பொதுமக்களின் பாதுகாப்பு கருதி, அதிகாரிகள் நேரில் ஆய்வு செய்து விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என சமூக ஆர்வலர்கள் மற்றும் வன்னியபுரம் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தமிழ்நாட்டைப் பின்பற்றி புதுச்சேரியிலும் குடும்ப தலைவிகளுக்கு வங்கிக் கணக்கில் ரூ.5000 வரவு வைப்பு

புதுச்சேரி: தமிழ்நாட்டைப் பின்பற்றி புதுச்சேரியிலும் குடும்ப தலைவிகளுக்கு வங்கிக் கணக்கில் ரூ.5000 வரவு வைக்கப்பட்டுள்ளது. சிவப்பு நிற குடும்ப அட்டைகளுக்கு மார்ச், ஏப்ரல் என இரு மாதங்களுக்கு வழங்கப்பட வேண்டிய ரூ.2,500 உதவித் தொகையை சேர்த்து மொத்தமாக வழங்கப்பட்டுள்ளது.

# பாஜக சார்பில் விளையாட்டு வீரர்களுக்கு பரிசு



கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நேற்று முன்தினம் JM.ரமேஷ் மாநில பொறுப்பாளர் பிரச்சார பிரிவு அவர்கள் பாரதிய ஜனதா கட்சி சார்பில் போச்சம்பள்ளி தாலுக்கா சந்தூர் கிராமத்தில் நடைபெற்ற கை பந்து போட்டி யை துவக்கி வைத்து விளையாட்டு வீரர்களை உற்சாகப்படுத்தி பரிசுகள் வழங்கினார்.

# புதுச்சேரி உருளையன்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் நேயம் மக்கள் கழக தலைவருமான G. நேரு(எ)குப்புசாமி MLA திருக்காரங்களால் அங்கன்வாடி மையங்களுக்கு திறப்பு விழா



புதுச்சேரி, மார்ச்.10–

புதுச்சேரி உருளையன் பேட்டை தொகுதிக்கு உட்பட்ட பல பகுதிகளில் சொந்த கட்டிடத்தில் அங்கன்வாடி மையங்கள் செயல்படாமல்... தனியார் கட்டிடங்களில் வாடகைக்கு அங்கன்வாடி மையங்கள் செயல்பட்டு வருகிறது.இதனால் அங்கன்வாடி மைய ஆசிரியர்கள் மற்றும் உதவியாளர்கள் தொகுதி சட்டமன்ற சட்டமன்ற உறுப்பினர் G.நேரு(எ)குப்புசாமி MLA அவர்களிடம்.எங்களால் வாடகைகொடுக்கமுடியவில்லை எங்கள் அங்கன்வாடி மையங்களுக்கு சொந்த கட்டிடம் கட்டிக் கொடுங்கள் என பல கோரிக்கைகள் வைத்திருந்தனர்.கோரிக்கையை ஏற்று சட்டமன்ற உறுப்பினர் G.நேரு(எ)குப்புசாமி MLA அவர்கள் சட்டப்பேரவை கூட்டத் தொடரில் உருளையன் பேட்டை தொகுதிக்குட்பட்ட நகரப் பகுதியில் உள்ள அங்கன்வாடி மையங்களுக்கு அரசு நிர்ணயித்த வாடகைக்கு இடம் கிடைக்கவில்லை என்றும் சொந்த கட்டிடங்கள் தேவை என பலமுறை அரசுக்கு கோரிக்கை வைத்தும் மேலும் சட்டமன்ற உறுப்பினர் அவர்களின் தொடர் முயற்சியின் காரணமாக மேலும் கடந்த காலங்களில் ஆட்சியில் இருந்தவர்கள் இதற்கான எந்த ஒரு நடவடிக்கையும் எடுக்காத நிலையில்.தொகுதிக்குட்பட்ட அரசு நிலங்கள் ஏதேனும் உள்ளதா என தேடப்பட்டு அதில்

குபேர் நகர் 5 வது குறுக்கு வீதியில் புதுச்சேரி நகராட்சிக்கு சொந்தமான இடத்தில் தனியார் ஆக்கிரமித்து இருப்பதை அறிந்து ஆக்கிரமிப்புகளை அகற்றி உருளையன்பேட்டை தொகுதிக்குட்பட்ட குபேர் நகர் வார்டு குபேர் நகர் 5வது தெருவில் புதிய அங்கன்வாடி மையம் கட்டிடம் கட்டுவதற்காக 2023 2024 சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி ரூபாய் 34 லட்சத்து 32 ஆயிரம் செலவில் புதுச்சேரி நகராட்சி மூலம் பணிகள் துவங்கப்பட்டு முடிக்கப்பட்டது அதன் திறப்பு விழா.மற்றும்பொதுப்பணித்துறை பொது சுகாதார குடிநீர் வழங்கல் பிரிவு மூலம் மேற்கண்ட கோவிந்தசாலை, குபேர் நகர், புது நகர் மற்றும் சுற்றியுள்ள பகுதிகளில் சுத்தமான தூய்மையான சுகாதாரமான குடிநீர் வழங்குவதற்காக ரூபாய் 10. லட்சத்து 50 ஆயிரம் செலவில் புதிய குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைக்கப்பட்டு அதன் திறப்பு விழாவும் 09.06.2026. திங்கள் கிழமை நேற்று காலை 9:30 மணியளவில் உருளையன்பேட்டை தொகுதி சட்டமன்ற உறுப்பினரும் நேயம் மக்கள் கழக தலைவர்மான. G.நேரு(எ)குப்புசாமி MLA அவர்கள் திருக்காரங்களால் திறப்பு விழா வெகு சிறப்பாக நடைபெற்றது.

விழாவில் புதுச்சேரி நகராட்சி ஆணையர் ஶ்ரீஜித் நகராட்சி செயற்பொறியாளர் .சிவபாலன் பொதுப்பணித்துறை பொது சுகாதாரபிரிவுசெயற்பொறியாளர் திருமதி.சுந்தரி நகராட்சி உதவி பொறியாளர்கள் திரு.பழனிராஜா .நமச்சிவாயம் பொதுப்பணித்துறை பொது சுகாதார குடிநீர் வழங்கல் பிரிவு உதவிபொறியாளர் ரமேஷ்குமார் மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறையின் திட்ட அதிகாரி செல்வகுமார் இளநிலை பொறியாளர்கள் குப்புசாமி வெங்கடேசன் மற்றும் புதுச்சேரி நகராட்சி அதிகாரிகளும் பொதுப்பணித் துறை அதிகாரிகளும் ஊழியர்களும் நகராட்சி ஊழியர்களும் மற்றும் அங்கன்வாடி ஆசிரியர்களும் உதவியாளர்களும் மேலும் உருளையன்பேட்டை தொகுதியை சேர்ந்த நேயம் மக்கள் கழக பிரமுகர்களும், நிர்வாகிகளும், மகளிர்களும், இளைஞர்களும் மேற்கண்ட பகுதியை சேர்ந்த பெரியவர்களும் பகுதி பொதுமக்களும் பலர் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

# சர்வதேச மகளிர் தினம்





புதுச்சேரி, மார்ச்10–

புதுச்சேரியில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மகளிர் சிறப்பு நிகழ்ச்சி ஹோட்டல் ஜெயராமில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சியில் 500க்கும் மேற்பட்ட மகளிர்கள் உற்சாகமாக கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் சட்டமன்ற சபாநாயகர் ஏம்பலம் ஆர். செல்வம், மாநில தலைவர் வி.பி. ராமலிங்கம், மகளிர் அணி தலைவி தாமரைச்செல்வி, மகளிர் அணி மாநில பொறுப்பாளர் ஜெயந்தி, மகளிர் அணி மாநில பொதுச் செயலாளர்கள் விஜயலட்சுமி மற்றும் பிரியா ஆகியோர் கலந்து கொண்டு மகளிர்களுக்கு வாழ்த்துகளை தெரிவித்தனர்.

மேலும் சிறப்பு அழைப்பாளராக ஆந்திரா மாநிலம் பாஜக செய்தி தொடர்பாளர் சைத்தா நீ யாமினி ஷர்மா, நகர் மாவட்ட தலைவர் கிருஷ்ணராஜ், மகளிர் அணி மாநில துணை தலைவிகள் மஞ்சு, மீனா, ஷகீலா, நகர் மாவட்ட தலைவி அனுராதா உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

அதேபோல் விளையாட்டு துறையில் சாதனை படைத்த தனுஜா (நேஷனல் கராத்தே), காயத்ரி ராமன் (இன்டர் நேஷனல் வாலிபால்), மௌனிகா (நேஷனல் கராத்தே) மற்றும் கீர்த்தனா (நேஷனல் கராத்தே) ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

நிகழ்ச்சியில் பெண் களின் சமூக, கல்வி மற்றும் பொருளாதார முன்னேற்றத்திற்காக மத்திய அரசாங்கம் மேற்கொண்டுள்ள பல்வேறு திட்டங்கள் மற்றும் நடவடிக்கைகள் குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. குறிப்பாக, பாரத பிரதமர் நரேந்திர மோடி அவர்கள் பெண்களின் அதிகாரமளிப்பு, பாதுகாப்பு மற்றும் தொழில் முன்னேற்றத் திற்காக செயல்படுத்திய திட்டங்கள் குறித்து விளக்கப்பட்டது. மேலும் எதிர்கால இந்தியாவின் வளர்ச்சியில் பெண்களின் பங்கு மற்றும் பங்களிப்பு மிக முக்கியமானது என்பதும் வலியுறுத்தப் பட்டது.

# ஹோலி பண்டிகை கொண்டாட்டம் !!



கோவை ஆர் எஸ் புரம் வேடப்பட்டி செல்லும் வழியில் டைமண்ட் சிட்டி அடுக்குமாடி குடியிருப்பு வளாகம் அமைந்துள்ளது இங்குகடந்த5ஆண்டுகளாக ஹோலி பண்டிகை சிறப்பாக கொண்டாடி வருகின்றனர். இந்த வருடமும் கலர்கள் பூசி விமர்சையாக கொண்டாடினர். இதில் பல முன்னணி மருத்துவர்கள் வழக்கறிஞர்கள் மற்றும் புகழ்பெற்றதொழிலதிபர்கள் விஐபிகள் கலந்து கொண்டனர். குழந்தைகள் முதல் பெரியவர்கள் வரை கொண்டாடினர்.

# சேலம் திமுகவில் எங்களுக்கு மரியாதை இல்லை அதிமுகவில் இணைந்த ஓமலூர் முன்னாள் எம்எல்ஏ.

சேலம், ஓமலூர் தொகுதி பாமக முன்னாள் எம்எல்ஏவான தமிழரசு,தனது ஆதரவாளர்களுடன் அதிமுகவில் இணைந்தார்.

சேலம் மாவட்டம் ஓமலூர் தொகுதியில் 2006ம் ஆண்டு பாமக எம்எல்ஏவாக இருந்த தமிழரசு அக்கட்சியிலிருந்து இருந்து விலகி திமுகவில் இணைந்தார்.



இந்நிலையில், அவர் நேற்று தனது ஆதரவாளர்களுடன் சேலத்தில் அதிமுக பொதுச் செயலாளர் பழனிசாமி முன்னிலையில் அதிமுகவில் இணைந்தார்.பின்னர் செய்தியாளர்களிடம் தமிழரசு கூறியதாவது: பாமக மற்றும் வன்னியர் சங்கத்தில் 40 ஆண்டு காலம் பயணித்தேன்.

2014ல் பாமகவில் இருந்து வெளியேறினேன். 2019ல் அழைப்பின் பேரில் ஆதரவாளர்களுடன் திமுகவில் இணைந்தேன். அப்போது, எங்களை ஆதரிப்பதாகவும் பாதுகாப்பதாகவும் சொன்னார் ஸ்டாலின். ஆனால், கடந்த 7 ஆண்டுகளில் எங்களுக்கு திமுகவில் குறைந்தபட்ச மரியாதை கூட இல்லை. மாவட்டச் செயலாளர் ராஜேந்திரன் பிரிவினையை ஏற்படுத்துகிறார். எனவே, மனமுவந்து, அதிமுகவில் இணைந்திருக்கிறோம். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம் செய்வீர்...

# அரசு அதிகாரிகள் அலட்சியம்




கிருஷ்ணகிரி மாவட்டம் போச்சம்பள்ளி தாலுகாவிற்கு உட்பட்ட மத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலக எல்லைக்குள் முறையான அடிப்படை வசதிகள் இன்றி பொதுமக்கள் பெரும் அவதிக்குள்ளாகி வருகின்றனர். இது குறித்து பலமுறை புகார் அளித்தும் அதிகாரிகள் அலட்சியம் காட்டி வருவதாகப் பொதுமக்கள் குற்றம் சாட்டுகின்றனர்.

குடிநீர் தட்டுப்பாடும் மத்தூர் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள மினி சின்டெக்ஸ் குடிநீர் தொட்டிகள் பல இடங்களில் முறையான பராமரிப்பு இன்றி காணப்படுகின்றன. இதனால் கடுமையான குடிநீர் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. அன்றாடத் தேவைகளுக் காகவும், குடிநீருக்காகவும் பொதுமக்கள் நீண்ட தூரம் அலைந்து திரியும் அவல நிலை ஏற்பட்டுள்ளது. மற்றும்

மத்தூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு உட்பட்ட பல தெருக்களில் தெருவிளக்குகள் எரிவதில்லை. இதனால் இரவு நேரங்களில் ஊர் முழுவதும் இருள் சூழ்ந்து காணப்படுகிறது. இதனால் குறிப்பாகப் பெண்கள், முதியவர்கள் மற்றும் குழந்தைகள் இரவு நேரங்களில் வெளியில் செல்ல அச்சப்படுகின்றனர். இருட்டைப் பயன்படுத்தி சமூக விரோதச் செயல்கள் நடக்க வாய்ப்புள்ள தாகவும், விபத்துகள் ஏற்படக்கூடும் என்றும் அப்பகுதி மக்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

சுகாதார சீர்கேட்டில் சாக்கடை கால்வாய்கள் நீண்ட நாட்களாகத் தூர்வாரப்படாமல் உள்ளன. கால்வாய் களுக்குள் குப்பைகள் தேங்கியும், செடி கொடிகள் அடர்ந்து வளர்ந்தும் காணப் படுகின்றன. இதனால் கழிவுநீர் செல்ல வழியின்றி தேங்கி நின்று துர்நாற்றம் வீசுவதோடு, கொசுக்கள் உற்பத்தியாகி நோய்த்தொற்று பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

அதிகாரிகளின் இது குறித்து மத்தூர் ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் பொதுமக்கள் சார்பில் பலமுறை புகார் அளிக்கப்பட்டும், புகார்கள் தெரிவிக்கப்பட்டும் இதுவரை எந்தவித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. அரசு அதிகாரிகளின் இத்தகைய மெத்தனப் போக்கினால் அடிப் படைத் தேவைகளுக்கே மக்கள் போராடும் நிலை நீடிக்கிறது.

தண்ணீர், தெருவிளக்கு, தூய்மை என அனைத்து நிலைகளிலும் மத்தூர் பகுதி புறக்கணிக் கப்பட்டுள்ளது. மாவட்ட நிர்வாகம் தலையிட்டு, சம்பந்தப்பட்ட ஊராட்சி ஒன்றிய அதிகாரிகளுக்கு உரிய உத்தரவு பிறப்பித்து, போர்க்கால அடிப்படையில் இந்தப் பிரச்சனைகளைத் தீர்க்க வேண்டும்" என இப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்

# பொது அறிவிப்பு

**வருவாய் கோட்டாசியர் அவர்கள்**
**திருப்பூர் மாவட்டம்.**

நாள்:08.01.2026
ந.க.6977/2025/ஆ2

திரு.**மணிகண்டன்**
த/பெ. பாலசுப்பிரமணியன்க.எண்.10
முத்து நகர் 2வது விரிவு.
கொங்கு மெயின் ரோடு.
திருப்பூர் மாவட்டம்.

.........மனுதாரர்.

இல்லை.

.......எதிர் மனுதாரர்.

மேற்கண்ட முகவரியில் வசிக்கும் திரு. பாலசுபிரமணியன் என்பவரது தாயார் திருமதி. தங்கத்தால், என்பவர் மேற்கண்ட முகவரியில் கடந்த 08.09.2019 தேதியன்று இறந்தது தொடர்பாக, அவரது இறப்பினை அந்நேரத்தில் பதிவு செய்ய தவறிய நிலையில் கால தாமதக் கட்டணத்துடன் இறப்பு சான்று பதிவு செய்து தர வேண்டி வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு செய்துள்ளார். இம்மனு மீது யாருக்கேனும் ஆட்சேபனை ஏதேனும் இருப்பின் இந்த அறிவிப்பு பிரதி வெளியான 15 நாட்களுக்குள் கனம் வருவாய் கோட்டா ட்சியர் முன்பு நேரில் ஆஜராகி ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது அவசியம். தவறும் பட்சத்தில் தீர்ப்பு ஒரு தலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என்பதை அறியவும்.

மனுதாரர்,
திரு. **மணிகண்டன்.**

# வந்தவாசி கருணீகர் சங்க கூட்டத்தில் மாணவர்களுக்கு கல்வி உதவித் தொகை



வந்தவாசி, மார்ச் 10:

திருவண்ணாமலை மாவட்டம்,வந்தவாசியில் தமிழ்நாடு கருணீகர் சங்க கிளை சார்பில் 6 ஆம் வகுப்பு முதல் டிகிரி வரை பயிலும் 37 மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை வழங்கும் விழா ரோட்டரி கிளப் அரங்கில் நடைபெற்றது. இந்த நிகழ்விற்கு கௌரவ தலைவர் ஓய்வுபெற்ற மாவட்ட மருத்துவ இணை இயக்குநர் டாக்டர் எஸ். குமார் தலைமை தாங்கினார். கிளை தலைவர் வி. விஜயகுமார், செயலாளர் எஸ்.இராமமூர்த்தி ஆகியோர் முன்னிலை வகித்தனர். பொருளாளர் எ.இராஜசேகரன் வரவேற்றார்.

சிறப்பு அழைப்பாளராக, தமிழ்நாடு கருணீகர் சங்க நிர்வாகி ஶ்ரீதேவி துரை அரசு கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினர். மேலும் இந்த நிகழ்ச்சியில் துணைத் தலைவர் சம்பத் குமார், கிளை பொறுப்பாளர்கள் மோகன் குமார், சீதாலட்சுமி, பாரதி, கஸ்தூரி உள்ளிட்ட 90 க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர். இறுதியில் சங்க நிர்வாகி இரா.அருள்ஜோதி நன்றி கூறினார்.

# பார்வர்ட் பிளாக் கட்சியின் மத்திய குழு உறுப்பினர் தேளி காளிமுத்து பிறந்தநாள் விழா கோளாக்காலமாக கொண்டாடப்பட்டது!!



திருப்பூர்: மார்ச்10

அகில இந்திய பார்வர்டு பிளாக் கட்சியின் திருப்பூர் புறநகர் மாவட்ட பொதுச் செயலாளர் மத்திய குழு உறுப்பினருமான தேளி க. காளிமுத்து தேவர் பிறந்த நாள் விழா திருப்பூர் காலேஜ் ரோட்டில் உள்ள சீனிவாசா மகாலில் காலை

9 மணிக்கு துவங்கி மதியம் அனைவருக்கும் அறுசுவை விருந்து வழங்கப்பட்டது.

இந்த விழாவில் தொண்டர்கள் நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர். விழாவின் தொடக்கமாக திருப்பூர் இடுவம்பாளையம் காது கேளாதோர். பள்ளி மாணவர்களுக்கு உணவு வழங்கப்பட்டது. பின்னர் சீனிவாசா மகாலில் ரத்ததான முகாம் நடைபெற்றது. முகாமை கட்சியின் தேசிய செயலாளர் ஶ்ரீ வை சுரேஷ். திருப்பூர் மாவட்ட தேவர் பேரவை தலைவர் சீனிவாச தேவர் கட்சியின் தேசிய கட்டுப்பாட்டு குழு தலைவர் சி .எம். முத்துராமலிங்கம் தேசிய செயலாளர் ஜெயராமன் ஆகியோர் தொடக்கி வைத்தனர். முகாமில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டது.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421